Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 248 | உள்ளூர் - 05.09.2026 | சனிக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 248 | வெளியூர் - 06.09.2026 | ஞாயிற்றுக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |



**2027 சனிப்பெயர்ச்சி: சவால்களை சந்திக்கக்கூடிய 3 ராசிகள்!**

**SBI-யில் 207 சிறப்பு அதிகாரிகள் பணியிடங்கள்!**

**செப்.17 மதுரை வருகை! கும்பாபிஷேகத்தில் முதல்வர்?**

**கே.என்.நேருவுக்கு சொந்தமான இடங்களில் சோதனை!**

## ஆசிரியர்களுக்கு பிரதமர் மோடி அறிவுரை!



புதுடில்லி, செப். 05–

தேசிய ஆசிரியர் விருது பெற்ற ஆசிரியர்களுடன் பிரதமர் மோடி இன்று கலந்துரையாடினார். அப்போது, மாணவர்களின் திறமைகளை ஆசிரியர்கள் கண்டறிந்து ஊக்குவிக்க வேண்டும் என்றார்.

குழந்தைகளின் ஸ்கிரீன் டைம் மற்றும் போதைப்பழக்கத்தை குறைக்க, விளையாட்டு, படைப்பாற்றல் செயல்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். போதைப்பொருள் அச்சுறுத்தலில் இருந்து குழந்தைப் பருவத்தை பாதுகாக்க, ஆசிரியர்கள் பாடத்திட்டத்துக்கு அப்பாலும் வழிகாட்ட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேலும், மாணவர்களின் நடத்தை மாற்றங்களை உன்னிப்பாகக் கவனித்து, அவர்களின் குழந்தைப் பருவத்தை பாதுகாப்பதில் ஆசிரியர்கள் முக்கியப் பங்காற்ற வேண்டும் என பிரதமர் மோடி தெரிவித்தார்.




## ஈரானுக்கு டிரம்ப் 'அல்டிமேட்டம்'!

# "பிகாக்ஸ் மவுண்டன்" அணுசக்தி தளம் குறி! "சந்தேகம் வந்தால் உடனடி தாக்குதல்"

## மத்திய கிழக்கில் வெடிக்கும் போர் பதற்றம்!!



புதுடெல்லி, செப். 05–

ஈரான்–அமெரிக்கா இடையேயான மோதல் தொடர்ந்து தீவிரமடைந்து வரும் நிலையில், ஈரானின் முக்கிய நிலத்தடி அணுசக்தி தளமான பிகாக்ஸ் மவுண்டன் மீது விரைவில் தாக்குதல் நடத்தப்படலாம் என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பகிரங்கமாக எச்சரித்துள்ளார். வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப், ஈரானிடம் அணு ஆயுதங்கள் இருப்பதையும், புதிதாக அவற்றை உருவாக்குவதையும் தடுப்பதே அமெரிக்காவின் முக்கிய நோக்கம் என்றார். ஈரானில் சந்தேகத்திற்கிடமான அணுசக்தி நடவடிக்கைகள் கண்டறியப்பட்டால், பிகாக்ஸ் மவுண்டன் தளம் மீது உடனடியாக தாக்குதல் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நதாண்ஸ் அணுசக்தி நிலையத்திற்கு அருகிலுள்ள மலைப்பகுதியில் அமைந்துள்ளதாக கூறப்படும் இந்த தளம், மலைக்கு அடியில் ஆழமாகவும் பாதுகாப்பாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேற்கத்திய உளவு அமைப்புகள், அணுசக்தி தொடர்பான ரகசிய நடவடிக்கைகள் மற்றும் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை பாதுகாக்க இந்த தளம் பயன்படுத்தப்படுவதாக சந்தேகிக்கின்றன. ஆனால், தங்களது அணுசக்தி நடவடிக்கைகள் அமைதியான நோக்கங்களுக்கானவை என ஈரான் தொடர்ந்து கூறி வருகிறது.

அமெரிக்காவின் தொடர் வான்வழித் தாக்குதல்களுக்கு ஈரான் கடும் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், டிரம்பின் புதிய எச்சரிக்கை மத்திய கிழக்கில் போர் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

## செப்.17 மதுரை வருகை! கும்பாபிஷேகத்தில் முதல்வர்?



மதுரை, செப். 05–

தமிழக அரசின் 'பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு விரிவாக்க திட்டம்' தொடக்க விழா விருதுநகரில் செப்.17–ம் தேதி நடைபெற உள்ளதாக தக வல் வெளியாகியுள்ளது. இதில் முதல்வர் விஜய் பங்கேற்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. முன்னதாக 1 முதல் 5–ம் வகுப்பு மாணவர்களுக்காக செயல்படுத்தப்பட்ட காலை உணவுத் திட்டம், தற்போது 6 முதல் 8–ம் வகுப்பு மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

இதன் மூலம் 15,454 அரசு மற்றும் உதவிபெறும் பள்ளிகளைச் சேர்ந்த 15,14,274 மாணவர்கள் பயன்பெற உள்ளனர்.

இந்த விரிவாக்கத் திட்டத்தை, காமராஜர் படித்த விருதுநகர் கே.வி.எஸ். பள்ளியில் தொடங்கி வைக்க அரசு திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. முதல்வர் விஜய்யின் நிகழ்ச்சி குறித்து இறுதி உறுதி இன்னும் வெளியாகவில்லை என்றாலும், கல்வித்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அதே நாளில் மீனாட்சி கோவில் கும்பாபிஷேகம் நடைபெறுவதால், முதல்வர் வருகை உறுதியானால் அதிலும் பங்கேற்க வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. முதல்வரின் நிகழ்ச்சி அதிகாரப்பூர்வமாக இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

## ஆசிரியர்களுக்கு முதலமைச்சர் ஆசிரியர் தின வாழ்த்து!



சென்னை, செப். 05–

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, மாணவர்களின் வளமான எதிர்காலத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் அனைத்து ஆசிரியர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச. ஜோசப் விஜய் அவர்கள் இதயங்கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் மற்றும் தலைசிறந்த கல்வியாளரான டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்தநாள் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

ஆசிரியர்கள் மாணவர்களின் மனங்களில் அறிவொளி, ஒழுக்கம், மனிதநேயம், சகோதரத்துவம், சமூகப் பொறுப்புபோன்ற உயரிய பண்புகளை விதைத்து, அவர்களின் திறமைகளுக்கு வழிகாட்டி, எதிர்காலத்திற்கான வலுவான அடித்தளத்தை அமைக்கின்றனர். ஆசிரியர்களின் தன்னலமற்ற அர்ப்பணிப்பும் சிறந்த வழிகாட்டுதலும் மாணவர்களின் எதிர்காலத்தை மேலும் ஒளிமயமாக்கட்டும் என்று முதலமைச்சர் வாழ்த்தியுள்ளார்.

## இதுவரை இல்லாத அளவுக்கு.. இந்தியாவின் அன்னிய செலாவணி கையிருப்பு உயர்வு!




புதுடெல்லி, செப். 05–

ஆகஸ்ட் 28ம்தேதி நிலவரப்படி, இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பு 11.47 பில்லியன் டாலர் அதிகரித்து, 740.80 பில்லியன் டாலர் என்ற சாதனை அளவை எட்டியுள்ளது.

ஈரானுக்கு எதிரான அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் போர் தொடங்குவதற்கு முன்பு, இந்தியாவின் அன்னிய செலாவணி கையிருப்பானது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகமாக இருந்தது. அதாவது கடந்த பிப்ரவரி 27–ந்தேதியுடன் முடிந்த வார நிலவரப்படி, 728.494 பில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ரூ.68 லட்சம் கோடி) இருந்தது.

பின்னர் போர் காரணமாக மத்திய கிழக்கில் ஏற்பட்ட பதற்றத்தால் ரூபாய் மதிப்பு வீழ்ச்சி மற்றும் ரிசர்வ் வங்கி டாலர் விற்பனையில் ஈடுபட்டதன் காரணமாக அன்னிய செலாவணி கையிருப்பு சரிந்தது.

பின்னர் ரூபாய் மதிப்பில் ஏற்பட்ட கடும் சரிவுக்கு மத்தியில், கடந்த ஜூன் மாதம் ரிசர்வ் வங்கி சலுகை அடிப்படையிலான அன்னிய செலாவணி மாற்றுத் திட்டங்களை அறிவித்தது.

இதன் மூலம் அன்னிய செலாவணி கையிருப்பு அதிகரித்து வருகிறது. இந்த நடவடிக்கையின் மூலம் 132 பில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகமான புதிய நிதி வரவு ஏற்பட்டுள்ளது.

கடந்த மாதம் 28–ந்தேதியுடன் நிறைவடைந்த வார நிலவரப்படி நாட்டின் அன்னிய செலாவணி கையிருப்பு 740.803 பில்லியன் அமெரிக்க டாலராக (சுமார் ரூ.69 லட்சம் கோடி) அதிகரித்து விட்டது.

இதில் முக்கிய பங்களிப்பு செய்யும் வெளிநாட்டு கரன்சி சொத்து மட்டுமே 600.67 பில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது. இதன் மூலம் அன்னிய செலாவணி கையிருப்பு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்து உள்ளது.

இதைப்போல ரிசர்வ் வங்கியின் கையிருப்பில் உள்ள தங்கத்தின் மதிப்பும் 2.191 பில்லியன் டாலர் அளவுக்கு அதிகரித்து 116.409 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

இதற்கிடையே சர்வதேச நிதியத்தில் உள்ள இந்திய தொகுப்பு கடந்த 28–ந்தேதி நிலவரப்படி 11 மில்லியன் டாலர் அளவுக்கு சரிந்து, 4.914 பில்லியன் டாலராக உள்ளது. இந்த தகவல்கள் ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு உள்ளன.



கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் 155ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் என்.ஆனந்த், மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் கோ.க. அருண்ராஜ், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் ப. வெங்கடரமணன், பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ராஜ்மோகன்,சுற்றுலாத்துறை அமைச்சர் எஸ். ராஜேஷ்குமார் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் எம். அருள் பிரகாசம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.அ.அருண் தம்புராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தலையங்கம்

மதுரை மணி
சனிக்கிழமை 05.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 19-ம் தேதி

## எவரெஸ்ட்டுக்கு உச்சக்கட்ட ஆபத்து!



மனிதர்களின் சிறுநீர், எரிபொருள் பயன்பாடு பனிப்பாறைகளை வேகமாக உருக்குவதாக ஆய்வில் அதிர்ச்சி!

உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தின் அடிவார முகாமில் மலையேற்ற வீரர்களின் செயல்பாடுகள் பனிப்பாறைகள் உருகுவதை தீவிரப்படுத்துவதாக புதிய ஆய்வு எச்சரித்துள்ளது. குறிப்பாக, முகாமில் வெளியேற்றப்படும் சிறுநீரும், சமையல் மற்றும் வெப்பத்திற்காக பயன்படுத்தப்படும் எரிபொருட்களும் உருவாக்கும் வெப்பம் பனிப்பாறைகளில் பாதிப்பை ஏற்படுத்துவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Regional Environmental Change இதழில் வெளியான இந்த ஆய்வை, நேபாளத்தின் நில அளவையாளர் மற்றும் புவிசார் விஞ்ஞானி கிம் லால் கௌதம் தலைமையிலான குழு மேற்கொண்டது.

உயரமான பகுதியில் நீரிழப்பைத் தவிர்க்க மலையேற்ற வீரர்கள் அதிக அளவில் தண்ணீர் குடிப்பதால், அடிவார முகாமில் ஒரு நாளுக்கு 6,000 லிட்டருக்கும் அதிகமான சிறுநீர் உருவாகிறது. திடக்கழிவுகள் அகற்றப்பட்டாலும், சிறுநீர் பனிப்பரப்பிலேயே வெளியேற்றப்படுவதாக ஆய்வு கூறுகிறது. மனித உடலில் இருந்து வெளியேறும் வெப்பமும் பனியை உருகச் செய்யும் காரணிகளில் ஒன்றாகும்.

**2,492 டன் பனி உருகும் அளவுக்கு வெப்பம்!**

2023 வசந்த காலத்தில் சுமார் 1,600 கூடாரங்களுடன் தற்காலிக கிராமம் போல செயல்பட்ட அடிவார முகாமில், 824 எல்பிஜி சிலிண்டர்கள், 18,935 லிட்டர் மண்ணெண்ணெய் மற்றும் 5,130 லிட்டர் பெட்ரோல் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் உருவான மொத்த வெப்ப ஆற்றல் 8,49,174 மெகாஜூல் என கணக்கிடப்பட்டுள்ளது. இது சுமார் 2,492 டன் பனியை உருக்கக்கூடிய அளவு என்றும், இதில் சிறுநீரால் மட்டும் 154 டன் பனி உருகியதாகவும் ஆய்வு தெரிவிக்கிறது.

மேலும், 1991 முதல் 2023 வரையிலான செயற்கைக்கோள் தரவுகளின்படி, அடிவார முகாமின் மேற்பரப்பு வெப்பநிலை ஆண்டுக்கு சராசரியாக 0.28°C உயர்ந்து வருகிறது. இது கும்பூ பனிப்பாறையின் பிற பகுதிகளை விட சுமார் இரண்டு மடங்கு வேகமான உயர்வாகும்.

ஹெலிகாப்டர்கள் மற்றும் மனிதர்களின் நேரடி உடல் வெப்பம் கணக்கில் சேர்க்கப்படாததால், உண்மையான சுற்றுச்சூழல் பாதிப்பு இதைவிட அதிகமாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

**அடிவார முகாமை மாற்ற பரிந்துரை:**

காலநிலை மாற்றத்துடன் மனித நடவடிக்கைகளும் பாதிப்பை தீவிரப்படுத்துவதால், எவரெஸ்ட் அடிவார முகாமை பனிப்பாறை இல்லாத தென்மேற்கு பகுதியில் உள்ள பாதுகாப்பான நிலப்பரப்புக்கு மாற்ற வேண்டும் என ஆய்வாளர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

## கிருஷ்ண ஜெயந்தி வாழ்த்து: விஜய்க்கு அர்ஜுன் சம்பத் பாராட்டு!



திருப்பூர், செப். 05–

திருப்பூரில் இந்து மக்கள் கட்சி சார்பில் நடைபெற்ற கிருஷ்ண ஜெயந்தி விழாவில் பங்கேற்ற அக்கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத், கிருஷ்ண ஜெயந்திக்கு வாழ்த்து தெரிவித்த முதல்வர் விஜய்க்கு நன்றி தெரிவித்தார்.

மேலும், கோயில்களில் செல்போன் பாதுகாப்புக்கு ₹5 கட்டணம் வசூலிப்பதை நிறுத்த வேண்டும், பகவத் கீதை மற்றும் திருக்குறளை தேசிய நூல்களாக அறிவிக்க வேண்டும், தமிழகத்தில் பசுவதைத் தடைச் சட்டம் கொண்டுவர வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை அவர் முன்வைத்தார்.

இந்த விழா ஏற்பாடு சிட்கோ வசந்த் மாநில இளைஞரணி செயலாளர் மற்றும் வெங்கடேஷ் காசி பாளையம் கருப்பு, பாண்டியன்,அருண்,கார்த்திக்,ஜிவா.முருகன்.அருண். உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்....

## கூட்டணிக்கு பெயர்? யார் ஒருங்கிணைப்பாளர்? செப். 9-ல்




சென்னை, செப். 05–

தவெக தலைவர் விஜய் தலைமையில் தோழமைக் கட்சிகளுடனான 2–ம் கட்ட ஆலோசனைக் கூட்டம் சென்னையில் செப். 9–ம் தேதி நடைபெற உள்ளது. இதற்காக தோழமைக் கட்சிகளின் தலைவர்களை சந்தித்து அமைச்சர்கள் அழைப்பு விடுத்து வருகின்றனர். கடந்த ஜூலை 1–ம் தேதி நடைபெற்ற முதல் கட்ட ஆலோசனைக் கூட்டத்தில் சில கட்சிகள் பங்கேற்காத நிலையில், தற்போது நடைபெறும் கூட்டத்தில் அனைத்து தோழமைக் கட்சிகளும் பங்கேற்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்களையும் அமைச்சர்கள் நேரில் சந்தித்து அழைப்பு விடுத்துள்ளனர். மதிமுக பொதுச்செயலாளர் வைகோ ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்பதாக உறுதியளித்துள்ளதாக கூறப்படுகிறது. தொடர்ந்து விசிக, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட உள்ளது.

இந்தக் கூட்டத்தில் கூட்டணியின் பெயர், ஒருங்கிணைப்பாளர் உள்ளிட்ட முக்கிய முடிவுகள் அறிவிக்கப்பட வாய்ப்புள்ளது. மேலும், இடைத்தேர்தல் மற்றும் உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாகவும் ஆலோசனை நடைபெறலாம் என தவெக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பராமரிப்புப் பணியால் ரயில் சேவைகளில் மாற்றம்!



சென்னை, செப். 05–

திருநெல்வேலி – திருச்செந்தூர் ரயில்கள் முழு ரத்து; மதுரை, ராமேஸ்வரம் உள்ளிட்ட வழித்தடங்களில் மாற்றம் பராமரிப்புப் பணிகள் காரணமாக செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் தென் மாவட்டங்களில் சில ரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**முழு ரத்து:**

56003 திருநெல்வேலி திருச்செந்தூர் மற்றும் 56004 திருச்செந்தூர் திருநெல்வேலி பயணிகள் ரயில்கள் செப்.22, 23, 24, 25, 28, 29, 30 ஆகிய தேதிகளில் முழுமையாக ரத்து.

**பகுதி ரத்து:**


56711 மதுரைராமேஸ்வரம் மற்றும் 56714 ராமேஸ்வரம் மதுரை ரயில்களில் செப்.8, 15, 22, 23, 24, 25, 29 தேதிகளில் மண்டபம் ராமேஸ்வரம் இடையே சேவை ரத்து.

56742 செங்கோட்டை திருநெல்வேலி மற்றும் 56743 திருநெல்வேலி செங்கோட்டை ரயில்களில் செப்.22, 23, 24, 25, 28, 29, 30 தேதிகளில் சேரன்மகாதேவி திருநெல்வேலி இடையே சேவை ரத்து.

**பாதை மாற்றம்:**

16848 செங்கோட்டை மயிலாடுதுறை, 16352 நாகர்கோவில்லோகமான்ய திலக், 16321 நாகர்கோவில் கோயம்புத்தூர், 16354 நாகர்கோவில்கச்சேகுடா ஆகிய எக்ஸ்பிரஸ் ரயில்கள் குறிப்பிடப்பட்ட தேதிகளில் மாற்றுப்பாதையில் இயக்கப்படும். இதனால் மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட சில வழக்கமான நிறுத்தங்கள் தவிர்க்கப்பட்டு, மானாமதுரை, சிவகங்கை, காரைக்குடி, புதுக்கோட்டை உள்ளிட்ட இடங்களில் கூடுதல் நிறுத்தங்கள் வழங்கப்படும். பயணிகள் பயணத்திற்கு முன் மாற்றப்பட்டுள்ள பாதை மற்றும் நிறுத்தங்களை சரிபார்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## தேய்பிறை அஷ்டமி: கால பைரவருக்கு சிறப்பு ஹோமம், அபிஷேகம்!



நாமக்கல், செப். 05–

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அருகே கல்லாங்குளம் அண்ணா மலையார் கோவிலில், தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு ஸ்ரீ அகோரமூர்த்தி கால பைரவருக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

சிறப்பு ஹோமம், புனுகு சாற்றுதல் மற்றும் வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்யப்பட்டது. தொடர்ந்து 8 தீபந்தங்களுக்கு நடுவே மயானத்தை நேருக்கு நேர் பார்த்தபடி சிறப்பு அலங்காரத்தில் கால பைரவர் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். தமிழகத்தி லேயே மயானத்தை நேருக்கு நேர் பார்த்தவாறு காட்சியளிக்கும் சிறப்புமிக்க கால பைரவர் திருத்தலம்என பக்தர்கள் தெரிவித்தனர். ராசிபுரம், புதுப்பாளையம், நாமக்கல் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். விழாவையொட்டி பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.


## திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம்!




திருப்பூர், செப். 05–

வன்கொடுமை தடுப்பு சட்டத்தை தவறாக பயன்படுத்துவதை கண்டித்து மாநகராட்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்துக்கு காமராஜர் மக்கள் பாதுகாப்பு பேரமைப்பு மாநில தலைவர் பூமிநாதன் தலைமை தாங்கி பேசும்போது, ‘வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் புகார் கொடுத்தவுடன் போலீசார் தீவிர விசாரணை நடத்தாமல் உடனடியாக வழக்குப்பதிவு செய்து விடுகிறார்கள். அரசியல் வாதிகளால் நிர்பந்திக்கப்பட்டு போலீசார் வழக்குப்பதிவு செய்கிறார்கள். சமீபத்தில் சுப்ரீம் கோர்ட்டு வெளியிட்டுள்ள உத்தரவில், வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் வழக்கு தொடுக்க வேண்டும் என்றால் உயர்வகுப்பை சேர்ந்த 3 சாதியினர் சாட்சி சொல்ல வேண்டும் என்று தெரிவித்துள்ளது. இந்த தீர்ப்பை மத்திய, மாநில அரசுகள் நடைமுறைப்படுத்துவது இல்லை. வன்கொடுமை தடுப்பு சட்டத்தை தவறாக பயன்படுத்துவதை கண்டித்தும், அந்த சட்டத்தில் திருத்தங்களை செய்ய வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை வைக்கிறோம். இந்தியா முழுவதும் இந்த கோரிக்கை எழுந்துள்ளது. தீவிர விசாரணைக்கு பிறகே வழக்கு போட வேண்டும் என்று போலீசாருக்கு அரசு உத்தரவிட வேண்டும்’ என்றார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு வணிகர் மகாஜன சங்க தலைவர் சந்திரன் ஜெயபால், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் மாநில தலைவர் எஸ் கர்ணன்தேவர், மாவட்ட அமைப்பு செயலாளர் அன்பு ரமேஷ், தமிழ்நாடு நாடார் சங்க தலைவர் முத்துரமேஷ், நாடார் பேரவை பொதுச்செயலாளர் சூலூர் சந்திரசேகரன், திருப்பூர் வாழ் ஏழாயிரம் பண்ணை நாடார் சங்கத்தின் செல்லப்பாண்டியன், முக்குலத்தோர் பாதுகாப்பு நலப்பேரவையின் தியாகராஜன், தேசிய நாடார் அமைப்பின் சிவாஜிராஜன், தமிழ்நாடு வணிகர் சங்க பேரவை மாநில இணை செயலாளர் சித்திரைவேல், திருப்பூர் மாவட்ட சிறு, குறு வியாபாரிகள் சங்க பொதுச்செயலாளர் கண்ணன், தமிழ்நாடு நாடார் மக்கள் முன்னேற்ற சங்கத்தின் நிறுவன தலைவர் பொன் விஸ்வநாதன், சான்றோர் குல நாடார் முன்னேற்ற சங்கத்தின் உதயா வெங்கடேஷ், தமிழ்நாடு வணிகர் மகாஜன சங்கத்தின் மாவட்ட தலைவர் சேர்மன்துரை, அ.ம.மு.க. திருப்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் குமணன், காமராஜர் மக்கள் பாதுகாப்பு பேரமைப்பு மாநில இளைஞரணி தலைவர் வசந்தகுமார், மாவட்ட தலைவர் மைக்கேல், காமராஜர் மக்கள் முன்னேற்ற சங்கத்தின் தலைவர் தனபால் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.



## 2027 சனிப்பெயர்ச்சி: சவால்களை சந்திக்கக்கூடிய 3 ராசிகள்!



சனி பெயர்ச்சி 2027 ஜூன் 3ம் தேதி நிகழ்வு உள்ளது. தற்பொழுது குரு பகவானின் ராசியான மீன ராசியில் சஞ்சாரம் செய்து வருகின்றார். அடுத்து மேஷ ராசிக்கு அடுத்த ஆண்டு பெயர்ச்சியாக உள்ளார். சனி பகவானின் இந்த பெயர்ச்சி காரணமாக சில ராசிகள் பாதகமான விளைவுகளை சந்திப்பார்கள். எந்த ராசிக்கு பாதிப்பு அதிகம் ஏற்படும், கவனமாக இருக்க வேண்டும் என தெரிந்து கொள்வோம்.

நவகிரகங்களில் அமைதிக்கு அதிபதி என அழைக்கப்படக்கூடிய சனி பகவான் இரண்டரை ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு ராசியில் இருந்து மற்றொரு ராசிக்கு பெயர்ச்சியாக கூடியவர். தற்பொழுது மீன ராசியில் சஞ்சாரம் செய்து வருகின்றார். அடுத்த ஆண்டு 2027 ஜூன் 3ம் தேதி மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்கு பெயர்ச்சியாக உள்ளார். மேஷ ராசியில் சஞ்சரிக்கும் போது சனி பகவான் எந்தெந்த ராசிகளுக்கு சாதகம் மற்றும் பலனை தருவார் என்று தெரிந்து கொள்வோம்.

மேஷ ராசியில் சனிப்பெயர்ச்சி 2027

இரண்டரை ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு ராசியில் இருந்து மற்ற ராசிக்கு பெயர்ச்சியாக கூடிய சனி பகவான், 2027 ஜூன் மாதம் மூன்றாம் தேதி மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்கு பெயர்ச்சி ஆகிறார். மேஷ ராசி அதிபதியான செவ்வாய் மற்றும் சனி கிரகங்கள் பகை கிரகங்களாக ஜோதிடத்தில் குறிப்பிடப்படுகின்றன. இதன் காரணமாக சனி பகவானின் இந்த பெயர்ச்சி காரணமாக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியதாகவே இருக்கும். 2027 ஜூன் 3 அன்று மேஷ ராசிக்கு சனியின் நுழையக்கூடிய நிலையில், அதன் பிறகு, சனி வக்ர கதியில் (பின்னோக்கிய இயக்கத்தில்) மீண்டும் மீன ராசிக்குத் திரும்புவார். 2028 பிப்ரவரி 23 அன்று, சனி நிரந்தரமாக மேஷ ராசிக்கு பெயர்ச்சி அடைவார்.

**மேஷ ராசி**

சனி பகவான் உங்களுடைய ராசிக்கு பெயர்ச்சியாவதால், அடுத்த இரண்டரை ஆண்டுகள் உங்களுக்கு ஜென்ம சனி நடக்கும். இதன் தாக்கம் காரணமாக



உங்களுக்கு உடல் நலம் தொடர்பான பிரச்சனைகள் அதிக அளவில் ஏற்படும். அதனால் எந்த விதம் உடல் ஆரோக்கியம் பிரச்சினைகளிலும் கூடுதல் கவனத்துடன் இருக்கவும். குடும்ப தேவைகள் மற்றும் உடல் நலம் தொடர்பாக செலவுகள் அதிகரிக்கும். இதனால் நிதி சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. நீங்கள் உங்களுடைய வேலை தொழில் போராட்டமான சூழல் இருக்கும். குடும்பத்திலும் பணியிடத்திலும் பல்வேறு கருத்து வேறுபாடுகள், சச்சரவுகளை சந்திக்க நேரிடும். நீங்கள் வாக்குவாதங்களை சந்திக்க நேரிடும். இந்த காலத்தில் உங்களுடைய கோபத்தை கட்டுப்படுத்துவது அவசியம். இந்த சமயத்தில் உங்களுடைய வருமானம் குறைவதோடு செலவுகளும் அதிகரிக்கும்.

**ரிஷப ராசி**

ரிஷப ராசி அன்பர்களுக்கு ஏழரை சனியின் முதல் பகுதியான விரய சனி தொடங்க உள்ளது. இதனால் பல்வேறு புதிய சிக்கல்களை எதிர்க்கலாம் நேரிடும். உடல் மற்றும் மனதளவில் சில தொந்தரவுகளை அனுபவிக்க வாய்ப்பு உண்டு. அதனால் உங்களுடைய சுறுசுறுப்பையும், உடல் உழைப்பை அதிகரிக்கவும். பெரிய உடனடியாக பிரச்சனைகளை கூட சரியாக கவனிக்கவும்.



சனி பகவானின் தாக்கம் காரணமாக ரிஷப ராசியினர், வெளியுறவுகளில் விரிசல் ஏற்படலாம். சிலருடன் சேர்ந்து செய்யக்கூடிய வேலை அல்லது தொழி லில் பிரச்சனைகளை சந்திக்க நேரிடும். மேலும் தேவையற்ற செலவுகள் உங்களை தொந்தரவு தரும். நீங்கள் ஏதேனும் கடன் வாங்கி இருந்தால் அதை திரும்ப செலுத்துவதில் அக்கறை காட்டவும். இல்லை எனில் மேலும் கடன் அதிகரிக்க வாய்ப்பு உண்டு. குடும்பம் சார்ந்த பிரச்சினைகள் அதிகரிக்கும். சிலருக்கு கண் வலி அல்லது தலை வலியை போன்ற தொந்தரவுகள் அடிக்கடி ஏற்படும்.

**மீன ராசி**

மீன ராசி நண்பர்களுக்கு அடுத்த இரண்டரை ஆண்டுகள், சனி பகவானின் ஏழரை சனியின் கடைசி பகுதி நடக்க உள்ளது.



இந்த காலத்தில் உங்களுக்கு சற்று நிவாரணம் தரக்கூடியதாக இருந்தாலும், நிதி நிலைமை தொடர்பாக அதிகம் பாதிக்கப்படுவீர்கள். நீங்கள் வரவு செலவு தொடர்பான திட்டமிட்டு செயல்படு வது நன்மை தரும். உன்னுடைய தொழிலில் ஏற்ற இறக்கங்களை எதிர்கொள்ள நேரிடும். சிலருக்கு மனநலம் தொடர்பான பாதிப்பு ஏற்படும்.

இந்தக் காலத்தில் உங்களுடைய தன்னம்பிக்கை குறைவாக காணப்படும். உடல் நலம் தொடர்பான பிரச்சனைகளும், வருமானத்தை விட செலவுகள் அதிகரிப்பதால் மனக்கவலையும் ஏற்படலாம். இருப்பினும் இந்த காலத்தில் உங்களின் ஒழுக்கம், இறை பக்தி மற்றும் பணத்தை பட்ஜெட் போட்டு செலவிடுவதால் உங்களுக்கு நிவாரணம் கிடைக்கும்.

**பாதுகாத்துக்கொள்ளும் வழிமுறைகள்:**

மேஷ ராசிக்கு சனி பகவானின் பெயர்ச்சியால் சில ராசிகள் சங்கடங்களை சந்தித்தாலும் அதிலிருந்து நிவாரணம் பெறும் விதத்தில் சில வழிபாடுகள் உங்களுக்கு உதவும். குறிப்பாக சனிக்கிழமைகளில் விரதம் இருப்பதும், ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் அரச மரத்தின் முன் கடுகு எண்ணெய் தீபம் ஏற்றி வழிபாடு செய்வது நன்மை தீரும். மேலும் சனிக்கிழமைகளில் அனுமன் சாலிசாவை பாராயணம் செய்வது நன்மை தரும்.

அடிக்கடி அருகில் உள்ள சிவபெருமான் கோயிலில் வழிபாடு செய்ய தவறாதீர்கள்.

**(பொறுப்புத் துறப்பு:**

இந்தக் கட்டுரையில் உள்ள தகவல்கள் முற்றிலும் உண்மையானவை அல்லது துல்லியமானவை என்று நாங்கள் கூறவில்லை. விரிவான தகவல்களுக்கு, சம்பந்தப்பட்ட துறையில் உள்ள நிபுணரை அணுகவும்.)






# 40 வயதுக்கு மேல் பெண்களே... உடற்பயிற்சியில் இந்த தவறுகளை மட்டும் செய்யாதீர்கள்!



வாரத்திற்கு 150 நிமிடங்கள் பயிற்சி அவசியம்; மாதவிடாய் மாற்றங்களை அலட்சியப்படுத்த வேண்டாம்!

40 வயதைக் கடந்த பெண்களுக்கு உடற்பயிற்சி என்பது உடல் எடையைக் கட்டுப்படுத்துவதற்கான வழி மட்டுமல்ல; வயதுக்கு ஏற்ப உடலில் ஏற்படும் மாற்றங்களை சமாளிக்க உதவும் முக்கியமான பழக்கமாகும். நேரம் குறைவாக இருந்தாலும் தினசரி குறைந்த நேரத்தை ஒதுக்குவது பலன் தரும். 40 வயதுக்குப் பிறகு தசை நிறை, வளர்சிதை மாற்றம், எலும்பு அடர்த்தி, உடலில் கொழுப்பு சேரும் விதம், இதய ஆரோக்கியம் ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்படலாம். குறிப்பாக பெரிமெனோபாஸ் காலத்தில் ஈஸ்ட்ரோஜன் மாற்றத்தால் மாதவிடாய் சுழற்சியிலும் மாறுபாடுகள் இருக்கலாம்.

**வாரத்திற்கு 150 நிமிடங்கள் பயிற்சி**

டாக்டர் சாருலதா பன்சால் பரிந்துரைப்படி, வாரத்திற்கு குறைந்தது 150 நிமிடங்கள் மிதமான ஏரோபிக் உடற்பயிற்சியும், 2 நாட்கள் தசை வலுப்படுத்தும் பயிற்சிகளும் மேற்கொள்ளலாம். வேகமான நடைப்பயிற்சி, சைக்கிள் ஓட்டுதல், நீச்சல், எடைப் பயிற்சி, ரெசிஸ்டன்ஸ் பேண்ட் பயிற்சிகள் பயனுள்ளதாக இருக்கும்.

நேரம் குறைவாக இருப்பவர்கள் 20 முதல் 30 நிமிடங்கள் தொடர்ந்து உடற்பயிற்சி செய்யலாம். ஆனால் பயிற்சியின் தீவிரத்தை திடீரென அதிகரிக்கக் கூடாது; உடல்நிலைக்கு ஏற்ப படிப்படியாக அதிகரிக்க வேண்டும்.

**கடுமையான பயிற்சியும், உணவு குறைப்பும் வேண்டாம்!**

போதிய உணவு இல்லாமல் கடுமையான உடற்பயிற்சி செய்வதும், வேகமாக உடல் எடையைக் குறைக்க முயற்சிப்பதும் மாதவிடாய் சுழற்சியை பாதிக்கலாம். உடலுக்குத் தேவையான ஆற்றல் குறைந்தால், மூளை பிட்யூட்டரி கரப்பிகருப்பைகள் இடையிலான ஹார்மோன் தொடர்பு பாதிக்கப்படலாம்.

**மாதவிடாய் மாற்றங்களை அலட்சியப்படுத்த வேண்டாம்**

மாதவிடாய் அதிகமாகவோ நீண்ட நாட்களாகவோ இருப்பதை உடற்பயிற்சியின் விளைவு என்று மட்டும் கருதக்கூடாது. அதிக ரத்தப்போக்கு, நீண்ட நாட்கள் மாதவிடாய், இடைப்பட்ட ரத்தப்போக்கு, உடலுறவுக்குப் பிறகு ரத்தப்போக்கு, கடுமையான இடுப்பு வலி போன்றவை இருந்தால் மருத்துவரை அணுக வேண்டும்.

நார்த்திசுக்கட்டிகள், அடினோமயோசிஸ், தைராய்டு பாதிப்பு போன்ற காரணங்களாலும் இவை ஏற்படலாம். அதிக ரத்தப்போக்கு ரத்தசோகையையும் ஏற்படுத்தக்கூடும்; சோர்வு, மூச்சுத்திணறல், தலைச்சுற்றல் போன்ற அறிகுறிகளும் கவனிக்கப்பட வேண்டும்.

**சமநிலையான உடற்பயிற்சியே சிறந்தது!**

தொடர்ந்து செய்யக்கூடிய மிதமான உடற்பயிற்சி, வாரத்திற்கு 23 நாட்கள் தசை வலுப்படுத்தும் பயிற்சி, போதிய ஓய்வு மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றை இணைத்துக்கொள்வது சிறந்தது. உடலை சோர்வடைய செய்வதற்காக அல்ல; ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காகவே உடற்பயிற்சி செய்ய வேண்டும்.




## 'இரும்புத்திரை' வாய்ப்பை மறுத்த மாதவன்.. மித்ரன் வெளியிட்ட தகவல்!



பேட்டி ஒன்றில் கலந்து கொண்ட இயக்குநர் பி.எஸ். மித்ரன், 'இரும்புத்திரை' படத்தில் விஷால் நடித்த கதாபாத்திரத்திற்கு முதலில் நடிகர் மாதவனை அணுகியதாக தெரிவித்துள்ளார்.

இப்படத்தின் கதையை முதலில் மாதவனிடம் கூறியதாகவும், கதையின் முதல் பாதை அவருக்கு மிகவும் பிடித்திருந்ததாகவும் மித்ரன் கூறியுள்ளார். ஆனால், இரண்டாம் பாதை மாதவனுக்கு முழுமையான திருப்தியை அளிக்கவில்லை. இதனால், மாதவன் இப்படத்தில் நடிப்பதைத் தவிர்த்ததாகவும், அதன்பிறகு 'இரும்புத்திரை' படத்தின் கதையை நடிகர் விஷாலிடம் கூறியதாகவும் மித்ரன் தெரிவித்துள்ளார். கதையை கேட்ட விஷால், அந்த கதாபாத்திரத்தில் நடிக்க சம்மதித்தார். இதையடுத்து உருவான 'இரும்புத்திரை' திரைப்படம் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது குறிப்பிடத்தக்கது.

# விநாயகர் சதுர்த்தி: பின்பற்ற நெறிமுறைகள்?



சென்னை, செப். 05–

சென்னை மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி விழா கொண்டாட்டத்தின்போது, பொதுமக்கள் விநாயகர் சிலைகளை கரைப்பதற்கான வழிமுறைகளை பின்பற்றி, சுற்றுச்சூழலை பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்குமாறு மாவட்ட கலெக்டர் எஸ்.மாலதி ஹெலன் கேட்டுக் கொண்டுள்ளார். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் தொன்று தொட்டு சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்கி வருகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மக்களாகிய நமக்கு மிகப்பெரிய கடமை இருக்கிறது. நீர் நிலைகள் (கடல், ஆறு மற்றும் குளம்) நமக்கு குடிநீர் ஆதாரத்தை தருகிறது. நீர் நிலைகளை பாதுகாக்கும் வகையில் வருகிற விநாயகர் சதுர்த்தி விழாவினை கொண்டாடும்போது, விநாயகர் சிலைகளை நீர்நிலைகளில் கரைப்பதற்கான மத்திய மாசுகட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதல்களின்படி (www.tnpcb.gov.in என்ற இணையதளத்தில் உள்ளது) மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டும் கரைத்து சுற்றுச்சூழலை பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

எனவே, பொதுமக்களுக்கு கீழ்க்கண்டவாறு வேண்டுகோள் விடப்படுகிறது.

1. களிமண்ணால் செய்யப்பட்டதும் மற்றும் பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் (PoP), பிளாஸ்டிக் மற்றும் தெர்மாகோல் (பாலிஸ்டிரின்) கலவையற்றதுமான, சுற்றுச்சூழலை பாதிக்காத மூலப்பொருள்களால் மட்டுமே செய்யப்பட்டதுமான விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் பாதுகாப்பான முறையில் கரைக்க அனுமதிக்கப்படுகிறது.

2. சிலைகளின் ஆபரணங்கள் தயாரிப்பதற்கு உலர்ந்த மலர் கூறுகள், வைக்கோல் போன்றவை பயன்படுத்தப்படலாம். மேலும், சிலைகளை பளபளப்பாக மாற்றுவதற்கு மரங்களின் இயற்கை பிசின்கள் பயன்படுத்தப்படலாம்.

3. ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் மற்றும் தெர்மாகோல் பொருட்களை பயன்படுத்த கூடாது. நீர் நிலைகள் மாசுபடுவதை தடுக்கும்பொருட்டு வைக்கோல் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் மட்டுமே சிலைகள் தயாரிக்க அல்லது சிலைகள்/பந்தல்களை அலங்கரிக்க பயன்படுத்த வேண்டும்.

4. சிலைகளுக்கு வர்ணம் பூசுவதற்கு நச்சு மற்றும் மக்காத ரசாயன சாயம்/எண்ணெய் வண்ணப் பூச்சுகளை கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது. சிலைகளின் மீது எனாமல் மற்றும் செயற்கை சாயத்தை அடிப்படையாக கொண்ட வண்ணப் பூச்சுகளை பயன்படுத்தக்கூடாது, மாற்றாக சுற்றுச்சூழலுக்குகந்த நீர் சார்ந்த / மக்கக்கூடிய / நச்சு கலப்பற்ற இயற்கை சாயங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

5. சிலைகளை அழகுப்படுத்த வண்ணப்பூச்சுகள் மற்றும் பிற நச்சு ரசாயனங்கள் கொண்ட பொருட்களுக்கு பதிலாக, இயற்கை பொருட்கள் மற்றும் இயற்கை சாயங்களால் செய்யப்பட்ட அலங்கார ஆடைகள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

6. விநாயகர் சிலைகளை மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தின் விதிமுறைகளின்படி கரைக்க வேண்டும்.

விநாயக சதுர்த்தி விழாவினை சுற்றுச்சூழலை கொண்டாடும்படி பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பாதிக்காதவாறு மாவட்ட கலெக்டர், காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ஆகியோரை மேலும் விவரங்களுக்கு அணுகலாம்.

சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் தமிழகத்திற்கு நீண்ட கால பாரம்பரியம் உள்ளது. விநாயகர் சதுர்த்தி, தெய்வீகத்தின் கொண்டாட்டம் மட்டுமல்ல, நமது சுற்றுச்சூழலின் அழகையும் தூய்மையையும் பாதுகாப்பதற்கான நமது உறுதிப்பாட்டை நிரூபிக்க ஒரு வாய்ப்பாகும். மேலும் மாவட்ட நிர்வாகத்தால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அறிவிக்கப்பட்ட இடங்களில் மட்டும் மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றி சிலைகளை கரைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அதிரடியாக குறைந்த தங்கம் விலை..!

சென்னை, செப். 05–

தங்கம் விலை மேலும் அதிரடியாக குறைந்துள்ளது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.1,360 குறைந்து ஒரு சவரன் ரூ.1,13,520–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.170 குறைந்து ஒரு கிராம் ரூ.14,190–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் இன்று மாற்றமில்லை. வெள்ளி ஒரு கிராம் ரூ.255–க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 55 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# ஆம்னி பஸ்களுக்கு அதிரடி செக்!




சென்னை, செப். 05–

தொடர் விடுமுறை மற்றும் பண்டிகை நாட்களில் ஆம்னி பஸ்களில் அதிக கட்டணம் வசூலிப்பது உள்ளிட்ட விதிமீறல்களை தடுக்க தமிழக போக்குவரத்து ஆணையரகம் அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது. வருகிற அக்டோபர் 2–ந்தேதி காந்தி ஜெயந்தி, அக்டோபர் 19–ந்தேதி ஆயுத பூஜை மற்றும் நவம்பர் 8–ந்தேதி தீபாவளி பண்டிகை என அடுத்தடுத்து தொடர் விடுமுறைகள் வர உள்ளன. இதையொட்டி ஆம்னி பஸ்களின் இயக்கம் அதிகரிக்கும் என்பதால், பயணிகளிடம் கூடுதல் கட்டணம் வசூலிப்பது, வரி நிலுவை வைத்திருப்பது, அதிக சுமைகளை ஏற்றிச் செல்வது, உரிய பர்மிட் இல்லாமல் பஸ்களை இயக்குவது போன்ற விதிமீறல்கள் நடைபெற வாய்ப்பு உள்ளது.

இதனை தடுக்கும் வகையில் தமிழகம் முழுவதும் 30–க்கும் மேற்பட்ட சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட உள்ளன. ஒவ்வொரு குழுவிலும் வட்டார போக்குவரத்து அதிகாரி உள்பட 3 பேர் இடம்பெறுவார்கள்.

இந்த குழுவினர் நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கிய பஸ் நிலையங்களில் திடீர் சோதனை நடத்தி ஆம்னி பஸ்களை கண்காணிப்பார்கள். விதிமீறல்கள் கண்டறியப்பட்டால் அபராதம் விதிப்பதுடன், தேவையான இடங்களில் பர்மிட் ரத்து உள்ளிட்ட கடும் நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று போக்குவரத்து ஆணையரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அடுத்த ஆண்டு வரை தொடரும் எல்நினோ... இந்தியாவில் வெப்பநிலை அதிகரிக்க வாய்ப்பு!



புதுடெல்லி, செப். 05–

மத்திய மற்றும் கிழக்கு வெப்ப மண்டல பசிபிக் பெருங்கடலின் மேற்பரப்பில் அதிகரிக்கும் வெப்பத்தால் ஏற்படும் ஒரு காலநிலை நிகழ்வு, எல்நினோ என அழைக்கப்படுகிறது. இது உலகம் முழுவதும் காலநிலையில் மிகப்பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளது.

தற்போது நடப்பில் இருக்கும் இந்த எல்நினோ அடுத்த ஆண்டு (2027) பிப்ரவரி மாதம் வரை நீடிக்கும் என உலக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. இதுகுறித்து வானிலை மைய செயலாளர் செலஸ்டி சாவ்லோ வெளியிட்ட அறிக்கையில், 'ஸ்பானிய மொழியில் எல்நினோ என்றால் ஆண் குழந்தை என்று பொருள். ஆனால் அது உலகெங்கிலும் உள்ள சமூகங்களுக்கும் பொருளாதாரங்களுக்கும் பெருத்த அடியை கொடுக்கும் ஆற்றலை கொண்டுள்ளது' என குறிப்பிட்டு உள்ளார்.

மேலும் அவர், 'எல்நினோ தாக்கத்தால் நாம் ஏற்கனவே இடையூறுகள், வறட்சி, வெள்ளம் போன்ற பேரழிவுகளை சந்தித்து வருகிறோம்.

எல்நினோ தீவிரமடைவதால் இது மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம்' என்றும் கூறியுள்ளார். இது மழைப்பொழிவு மற்றும் வெப்பநிலை முறைகளிலும், அதனுடன் தொடர்புடைய வெள்ளம், வறட்சி மற்றும் கடும் வெப்பம் போன்ற அபாயங்களிலும் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

இதற்கிடையே எல்நினோவின் தாக்கம் இந்தியாவில் மழைப் பொழிவை பெருமளவில் குறைக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. கடந்த மாதம் இந்தியாவில் மழைப்பொழிவு 16 சதவீதம் வரை குறைந்ததற்கு எல்நினோவே காரணம் எனவும் அது தெரிவித்து உள்ளது.

அந்தவகையில் கடந்த 1901–ம் ஆண்டு முதல் தற்போது வரை மிகவும் வெப்பமான ஆகஸ்டு மாதமாக கடந்த மாதம் பதிவாகி இருக்கிறது. இதற்கு எல்நினோவும் ஒரு காரணம் என கண்டறியப்பட்டு உள்ளது. இதைப்போல இந்த மாதத்துக்கான மழைப்பொழிவும் நீண்ட கால சராசரியில் 91 சதவீதத்துக்கும் குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 1971 முதல் 2020–ம் ஆண்டு வரை செப்டம்பர் மாத நீண்ட கால சராசரி 167.9 மி.மீ. ஆகும். இந்தியாவில் பருவமழைக்கு பிந்தைய வானிலை நிலவரம் இன்னும் வெளியிடவில்லை என்றாலும், எல்நினோ காரணமாக இந்தியாவில் குளிர்காலம் சுருங்கி மிகுந்த வெப்பம் நிறைந்ததாக இருக்கும் என டெல்லியை சேர்ந்த காலநிலை ஆய்வு அமைப்பு ஒன்று கூறியுள்ளது.

# தீபாவளி ரயில் முன்பதிவு: செப்.6 முதல் தொடக்கம்!




சென்னை, செப். 05–

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, சென்னையிலிருந்து வெளியூர் செல்லும் விரைவு ரயில்களுக்கான முன்பதிவு செப்.6–ம் தேதி காலை 8 மணிக்கு தொடங்குகிறது. நவ.8–ம் தேதி தீபாவளி கொண்டாடப்பட உள்ள நிலையில், நவ.5–ம் தேதி பயணத்துக்கான முன்பதிவு ஞாயிற்றுக்கிழமை தொடங்குகிறது.

நவ.6 பயணத்துக்கு செப்.7–ம் தேதியும், நவ.7 பயணத்துக்கு செப்.8–ம் தேதியும் முன்பதிவு செய்யலாம். தீபாவளி முடிந்து சென்னை திரும்புவோருக்கான பயணச்சீட்டு முன்பதிவு செப்.10 முதல் தொடங்கும் என தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

# வேலை வாய்ப்பு

## SBI–யில் 207 சிறப்பு அதிகாரிகள் பணியிடங்கள்!




பாரத ஸ்டேட் வங்கியில் (SBI) 207 Specialist Cadre Officers பணியிடங்களுக்கான புதிய வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியாகியுள்ளது. தகுதியும் ஆர்வமும் உள்ள இந்தியா முழுவதும் உள்ள விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் மூலம் செப்.25 வரை விண்ணப்பிக்கலாம்.

**விவரங்கள்**

நிறுவனம்: பாரத ஸ்டேட் வங்கி (SBI)
பணி: Specialist Cadre Officers
காலியிடங்கள்: 207
பணி நியமனம்: நிரந்தரப் பணி
பணியிடம்: இந்தியா முழுவதும்
அறிவிப்பு எண்: CRPD/SCO/2026–27/23
விண்ணப்ப தொடக்கம்: 04.09.2026
விண்ணப்பிக்க கடைசி நாள்: 25.09.2026
விண்ணப்ப முறை: ஆன்லைன் – https://sbi.bank.in/




# திருச்சூர் அருகே கோர விபத்து: தமிழகத்தைச் சேர்ந்த 8 மாணவர்கள் பலி!

மதுரை மணி நாளிதழ்



திருச்சூர், செப். 05–

கேரள மாநிலம் திருச்சூர் அருகே தேசிய நெடுஞ்சாலை 66–ல் நள்ளிரவில் நிகழ்ந்த கோர சாலை விபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த 8 பேர் உயிரிழந்தனர். மதுரை பதிவு எண் கொண்ட கார் குருவாயூரில்இருந்து கொடுங்கல்லூர் நோக்கிச் சென்றபோது, சாலைப் பணிகள் நடைபெற்ற இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த லாரி மீது எதிர்பாராதவிதமாக மோதியது. இதில் காரில் பயணித்த 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயமடைந்த ஒருவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். உயிரிழந்தவர்களில் ஒருவரின் கல்லூரி அடையாள அட்டை கிடைத்துள்ளது. அவர் திண்டுக்கல்லில் உள்ள பொறியியல் கல்லூரி மாணவர் என்பது தெரியவந்துள்ளது. இதனால் உயிரிழந்த அனைவரும் மாணவர்களாக இருக்கலாம் என போலீசார் கருதுகின்றனர்.






4 RNI No. 24402/73 RNP license Regn. No.TN/MA/62/2024-2026 மதுரை மணி உள்ளூர் 05.09.26 வெளியூர் 06.09.26

## இன்றைய கார்ட்டூன்




## கே.என்.நேருவுக்கு சொந்தமான இடங்களில் சோதனை!

சென்னை, செப். 05–

தமிழகத்தில் பத்துக்கும் அதிகமான இடங்களில் இன்று லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் முன்னாள் அமைச்சரான, திமுகவின் கே.என்.நேருவுக்கு சொந்தமான இடங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சோதனை நடைபெற்று வருகிறது. திருச்சி தில்லை நகரில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேருவிற்கு சொந்தமான இடங்கள் மற்றும் அவரது சகோதரர் ரவிச்சந்திரன் தொடர்புடைய இடங்களிலும் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனையில் இறங்கியு ள்ளது. ரவிச்சந்திரனுக்கு சொந்தமான டிவிஹெச் என்ற கட்டுமான நிறுவனத்திலும் சோதனை நடைபெற்று வருகிறது. இதேபோல் சென்னை அடையாறு, திருவான்மியூர், அண்ணா நகர், ஆர்.ஏ.புரம் உள்ளிட்ட இடங்களிலும் சோதனையானது நடைபெற்ற வருவதாக அதிகாரிகள் தர ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## நேபாள பெருவெள்ளம்: பலி 1,344 ஆக உயர்வு! நோய்கள் பரவும் அபாயம்!!

நேபாளம், செப். 05–

நேபாள பெருவெள்ளத்தில் பலியானவ ர்களின் எண்ணிக்கை சனிக்கிழமை (செப். 5) 1,344 ஆக உயர்ந்ததாக நேபாள காவல்துறை அறிவித்துள்ளது.

திபெத் – நேபாள எல்லையில் பெரும் பனிப்பாறைச் சரிவால் லெண்டே நதியில் கடந்த ஆகஸ்ட் 26 ஆம் தேதி ஏற்பட்ட பெருவெள்ளம் நேபாளத்தின் போடே கோஷி நதியில் சீறிப்பாய்ந்தது.

சகதியுடன் பல அடி உயரத்துக்கு பெருக்கெடுத்த வெள்ளத்தில் கரையோர கிராமங்கள், சிறு நகரங்கள் அடியோடு அழிந்தன. வீடுகள், கட்டடங்கள், வாகனங்கள், பாலங்கள், சாலைகள், நீர்மின் நிலையங்கள், இதர உள்கட்டமைப்புகள் அடித்துச் செல்லப்பட்டன.



இந்தப் இயற்கைப் பேரிடரில் சிக்கி இதுவரை 1,344 பேர் பலியான நிலையில், காணாமல் போன 4800–க்கும் மேற்பட்டோரைத் தேடும் பணி தொடர்ந்து வருகிறது.

இதைத் தொடர்ந்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சில பகுதிகளில் நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த வெள்ளத்தில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் பிதூரும் ஒன்றாகும். பிதூரில் குடிப்பதற்காகப் பயன்படும் 15 நீர் நிலைகள் பாக்டீரியாவால் அசுத்தமடை ந்திருப்பது கண்டறியப்பட்டதாக செய்தி வெளியானது.

இதையடுத்து தற்போது, சுமார் 1,00,000 மக்களுக்கு காலரா தடுப்பூசியும், 75,000–க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பூசியும் வழங்குவது குறித்து அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர். இந்தப் பேரிடருக்குப் பிறகு, தொற்றும் நோய்கள், தொற்றா நோய்கள் மற்றும் பூச்சிகளால் பரவும் நோய்களின் அபாயம் அதிகரிக்கக்கூடும் என்று பொது சுகாதார வல்லுநர்கள் எச்சரித்துள்ளதாக நேபாள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## புதிய அரசின் பூச்சாண்டிகளுக்கெல்லாம் அஞ்சிட மாட்டோம்: மு.க.ஸ்டாலின்!

சென்னை, செப். 05–

திமுக முன்னாள் அமைச்சர் கே.என். நேருவுக்கு சொந்தமான இடங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடத்தியதற்கு திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

கே.என். நேருவுக்கு சொந்தமான இடங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் நடவடிக்கை மேற்கொண்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து மு.க. ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்திருப்பதாவது, “உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது; சட்டப்பேரவைக் கூட்டத்தொடரும் நடந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையில், முழுக்க முழுக்க அரசியல் காரணங்களுக்காகவே கழக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு மீதான சோதனை நடவடிக்கையை தவெக அரசு மேற்கொண்டுள்ளது.

ஆட்சி அமைக்க மற்ற கட்சிகளின் சட்டப்பேரவை உறுப்பினர்களை ராஜிநாமா செய்ய வைத்து, சட்டப்பேரவை வளாகத்திலேயே அவர்களைத் தம் கட்சியில் சேர்த்ததையும் குதிரை பேரம் நடத்தியதையும், அது தொடர்பான புகார்களில் லஞ்ச ஒழிப்புத்துறை முதல் தகவல் அறிக்கையைக் கூட பதியாததையும் தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவர்.



இந்திய ஜனநாயகத்தின் இருண்ட பக்கமாய் இந்தப் போக்கு தொடரும் நிலையில் வழக்கம்போல் திசைதிருப்பும் நடவடிக்கையைக் கையில் எடுத்துள்ளது இந்த ரீல்ஸ் அரசு.

கே.என். நேருவும், கழகமும் புதிய அரசின் இத்தகைய பூச்சாண்டிகளுக்கெல்லாம் அஞ்சிட மாட்டோம். சட்டத்தின் வழியில் அனைத்தையும் எதிர்கொண்டு வெல்வோம்” என்று கூறியுள்ளார். சென்னையில் மயிலாப்பூர், அடையார், திருவான்மியூர், அண்ணா நகர், அபிராமபுரம் உள்ளிட்ட கே.என். நேரு மற்றும் அவரது சகோதரர் ரவிச்சந்திரனுக்கு சொந்தமான 10 இடங்களிலும் லஞ்ச ஒழிப்புத் துறையினர் சோதனை நடத்தினர்.

இதுபோன்று திருச்சி தில்லை நகரில் உள்ள கே.என். நேரு வீடு மற்றும் அவருக்கு சொந்தமான இடங்களில் நான்கு வாகனங்களில் வந்த லஞ்ச ஒழிப்புத் துறை போலீசார் சோதனை நடத்தினர். சட்டவிரோதமாக பல்வேறு நிறுவனங்களில் கட்சி நிதி (பார்ட்டி ஃபண்ட்) கேட்டு மிரட்டி வசூல் செய்ததாக வந்த குற்றச்சாட்டின் பேரில் லஞ்ச ஒழிப்புத் துறையினர் சோதனை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 3 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட முன்னாள் காங்கிரஸ் எம்.எல்.ஏ.வுக்கு தடை!

சென்னை, செப். 05–

3 ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட அசன் மவுலானாவுக்கு தடை விதித்து தேர்தல் கமிஷன் இன்று (சனிக்கிழமை) உத்தரவிட்டுள்ளது. 2021 தேர்தல் செலவுக் கணக்கை முறையாக தாக்கல் செய்யாத காரணத்தினால் தேர்தல் கமிஷன் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. இதன்படி அடுத்து வரும் 3 ஆண்டுகளுக்கு நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட தகுதியற்றவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.



அனுமதிக்கப்பட்ட ரூ.30 லட்சம் என்ற உச்சவரம்பை மீறி அசன் மவுலானா தேர்தல் செலவு செய்ததாகவும், ஜனவரி, பிப்ரவரி மாத ங்களில் விசாரணைகளுக்கு ஆஜராகி விளக்கம் தெரிவிக்கவில்லை என்றும் தேர்தல் கமிஷன் குற்றம் சாட்டியுள்ளது.

## தமிழில் அனைத்து அரசாணைகள்: வலுக்கும் கோரிக்கை!

சென்னை, செப். 05–

உயர்நீதிமன்றத்தில் தமிழை முதன்மை நீதிமன்ற மொழியாக அங்கீகரிக்க வலியுறுத்தும் தமிழக அரசு, மாநிலத்தில் பிறப்பிக்கப்படும் அனைத்து அரசாணை களையும் தமிழில் வெளியிடுவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ் ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை முதன்மை நீதிமன்ற மொழியாக அங்கீகரிக்க வேண்டும்; உயர்நீதிமன்றத்தில் வழங்கப்படும் தீர்ப்புரைகள், தீர்ப்பாணைகள் உள்ளிட்ட அனைத்தையும் தமிழில் வழங்குவதற்கான கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தி முதல்வர் ஜோசப் விஜய் கொண்டுவந்த தனித் தீர்மானம் தமிழக சட்டப்பேரவையில் வியாழக்கிழமை நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் தமிழ் ஆர்வலர்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ள நிலையில், தமிழக அரசின் நிர்வாக நடைமுறைகளிலும் தமிழுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது. 70 ஆண்டுகளாகியும் முழுமையடையாத செயலாக்கம்: தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டம், 1956– இன்படி, மாநிலத்தின் ஆட்சி மொழியாக தமிழ் அறிவிக்கப்பட்டது. ஆனால், சட்டம் இயற்றப்பட்டு சுமார் 70 ஆண்டுகள் கடந்த நிலையிலும், ஆட்சிமொழிச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து முன்வைக்கப்படுகிறது. அரசுத் துறைகளின் செயல்முறைகள் மட்டுமன்றி, உயரதிகாரிகளுக்கான பணியிட மாறுதல் உள்ளிட்ட அரசாணைகள்கூட பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே வெளியிடப்படுகின்றன என்பதைத் தமிழ் ஆர்வலர்கள் வருத்தத்துடன் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதில் விதிவிலக்காக, இந்திய ஆட்சிப் பணி (ஐஏஎஸ்) அதிகாரிகளுக்கான பணியிட மாறுதல் தொடர்பான அரசாணைகள் அண்மைக்காலமாக தமிழிலும் வெளியிடப்பட்டு வருகின்றன. அதேநேரத்தில், இந்திய காவல் பணி (ஐபிஎஸ்) அதிகாரிகளுக்கான பணியிட மாறுதல் அரசாணைகள் இதுவரை ஆங்கிலத்தில் மட்டுமே வெளியிடப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர். ஆங்கிலத்தில் வெளியிடப்படும் அரசாணைகளுக்கு தமிழ் மொழிபெயர்ப்பையும் வெளியிட வேண்டும் என்பதற்காக அரசு சார்பில் தனியாக அரசாணை பிறப்பிக்கப்பட்டிருந்தாலும், பெரும்பாலான துறைகளில் இந்த நடைமுறை முழுமையாகப் பின்பற்றப்படுவதில்லை என தமிழ் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். இதனால், பொதுமக்கள் நேரடியாகத் தொடர்புடைய முக்கிய அரசாணைகள் ஆங்கிலத்தில் மட்டுமே வெளியிடப்படுவதால், அவை எளிய மக்களின் கவனத்துக்குச் செல்வதில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

தமிழ் வளர்ச்சித் துறையிலும் ஆங்கில அரசாணைகள்: தமிழ் வளர்ச்சித் துறை தொடர்பான சில அரசாணைகள்கூட ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டி ருப்பது அந்தத் துறை அலுவலர்களி டையே அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதேபோல, தமிழ்நாடு அரசுத் துறை வாகனங்களில் தமிழில் பெயர்ப் பலகைகள் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் நீடிக்கும் நிலையில், வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளை தமிழில் அமைக்க வேண்டும் என்ற அரசாணையைச் செயல்படுத்த தமிழ் வளர்ச்சித் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருவதாக வணிகர்கள் தரப்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

அலுவலகக் கோப்புகளிலும் முரண்பாடு: தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அரசு அலுவலர்கள் அலுவலகக் கோப்புகளில் தமிழில் கையொப்பமிட வேண்டும் என்றும், கோப்புகளை இயன்றவரை தமிழில் தயாரிக்க வேண்டும் என்றும் தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ஆண்டுதோறும் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்தப்படுகின்றன. இருப்பினும், நடைமுறையில் பல முக்கிய நிர்வாக ஆவணங்கள் ஆங்கிலத்திலேயே தொடர்வதாக தமிழ் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த நிலையில், உயர்நீதிமன்றத்தில் தமிழை முதன்மை நீதிமன்ற மொழியாக அங்கீகரிப்பதற்கான தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது, தமிழக அரசின் நிர்வாக மொழியாக தமிழை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் இணையான முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

## அதிகரித்து வரும் டெங்கு, பன்றிக்காய்ச்சல் - மருத்துவர்கள் எச்சரிக்கை!

சென்னை, செப். 05–

தமிழ்நாட்டில் கடந்த ஜனவரி 1–ந்தேதி முதல் ஆகஸ்டு மாதம் 30–ந்தேதி வரையிலான நிலவரப்படி, 13 ஆயிரத்து 573 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். அதாவது பாதிக்கப்பட்டவர்களில் 0.06 சதவீதம் பேர் மட்டுமே உயிரிழந்தனர். இது சற்று ஆறுதல் தரும் செய்தி என்றாலும், பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவது அச்சத்தை ஏற்படுத்துகிறது.




கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து மாதவாரியாக எவ்வளவு பாதிப்புகள் என்ற விவரமும் கிடைத்திருக்கிறது. அதில் ஜனவரியில் 1,722 பேரும், பிப்ரவரியில் 1,322 பேரும், மார்ச்சில் 1,228 பேரும், ஏப்ரலில் 1,201 பேரும், மே மாதத்தில் 1,062 பேரும், ஜூனில் 1,384 பேரும், ஜூலையில் 2,339 பேரும், ஆகஸ்டில் 3,315 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதாவது ஜனவரியில் பாதிப்பின் தாக்கம் ஏற்றம் கண்டு பிறகு குறைந்து வந்து ஜூனில் இருந்து மீண்டும் உயரத் தொடங்கியுள்ளது. இதை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், ஜூலை, ஆகஸ்டு மாதத்தில் பாதிப்புகள் அதிகரித்திருப்பதை பார்க்க முடிகிறது.

கடந்த ஆண்டு ஜூலையில் 1,880 பேர் என்றிருந்த பாதிப்பு இந்த ஆண்டில் 2,339 பேராக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் 1,832 என இருந்த பாதிப்பு எண்ணிக்கை, இந்த ஆண்டில் 3,315 ஆக எகிறியுள்ளது.

இதில் அதிகம் சென்னை மாவட்டத்தில்தான் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. ஜனவரி மாதத்தில் இருந்து ஆகஸ்டு வரையிலான தமிழ்நாடு மொத்த டெங்கு பாதிப்பான 13.573–ல் சென்னையில் மட்டும் 2.584 ஆக உள்ளது. அதற்கடுத்தபடியாக கோவையில் 1,999 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆண்டுவாரியான பாதிப்பில் கடந்த 2022–ம் ஆண்டில் இருந்து 2024–ம் ஆண்டு வரை பாதிப்பு எண்ணிக்கை உச்சத்தில் இருந்த நிலையில், கடந்த ஆண்டு வெகுவாக குறைந்து. ஆண்டு பாதிப்பு 25,533 ஆக இருந்தது. இந்த நிலையில் நடப்பாண்டில் ஆகஸ்டு மாதம் வரையிலான எண்ணிக்கையில் 13,573 ஆக உள்ளது. இன்னும் மழைக்காலம் வேற தொடங்க இருக்கிறது. எனவே நோய் பாதிப்பு எப்படி இருக்கும்? என்பதை கணிக்க முடியாது.

இதேபோல் பன்றிக் காய்ச்சல் பாதிப்பைப் பொறுத்தவரையில், இந்தியாவில் சுமார் 9 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதில் தமிழ்நாட்டில் மட்டும் 1,558 பேருக்கு பன்றிக் காய்ச்சல் பாதிப்பு இருக்கிறது. ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தியாவில் பாதிப்புப் பட்டியல்களில் தமிழ்நாடு 2–வது இடத்தில் உள்ளது.

2010–ம் ஆண்டில் இருந்து பன்றிக் காய்ச்சல் பாதிப்பை ஒப்பிடும்போது, 2024, 2025–ம் ஆண்டை விட நடப்பாண்டில் பாதிப்பு அதிகரித்து இருப்பது புள்ளிவிவரத்தில் தெரிகிறது. 2024–ல் 1,777 பேரும், 2025–ல் 1,288 பேரும் பாதிக்கப்பட்டிருந்த சூழலில் இந்த ஆண்டில் 1,791 ஆக உள்ளது.

மாதம் வாரியான பாதிப்பில், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் ஜூன், ஜூலை, ஆகஸ்டில் பல மடங்கு பாதிப்பு உயர்ந்திருக்கிறது. உதாரணமாக கடந்த ஆண்டு ஆகஸ்டில் 46 ஆக இருந்த பன்றிக் காய்ச்சல் பாதிப்பு, இந்த ஆண்டில் 645 ஆக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்விரு நோய்களும் தனிமனிதனின் உடல்நலத்தைப் பாதிப்பதோடு மட்டுமின்றி, சமூகத்தில் ஒரு சுகாதார நெருக்கடியையும் ஏற்படுத்துகின்றன.

எனவே, உரிய விழிப்புணர்வு, சுற்றுப்புறத் தூய்மை, கொசு ஒழிப்பு மற்றும் அரசின் தடுப்பு நடவடிக்கைகளே இவற்றின் பிடியிலிருந்து மக்களைக் காப்பதற்கான அத்தியாவசிய தேவைகளாக உள்ளன. மேலும், தனிமனித நடவடிக்கை, சுகாதார பாதுகாப்பு போன்ற முன்னெச்சரிக்கை முன்னெடுப்புகளை மிகுந்த கவனத்தோடு மக்கள் பின்பற்ற வேண்டும் என டாக்டர்கள் அறிவுறுத்துகின்றனர்.

## 12 வயது சென்னை பள்ளி மாணவன் தனது முதல் காமிக்ஸ் புத்தகத்தை வெளியிட்டார்!

சென்னை, செப். 05–

சென்னை அண்ணா நகரில் உள்ள SBOA School & Junior College–ல் 7 ஆம் வகுப்பு பயிலும் 12 வயது S. கஹன்ஷ்வா, தனது முதல் காமிக்ஸ் புத்தகமான ‘K–Komix Kahanshwa’s Komix’–ஐ சென்னை டி.நகரில் உள்ள M Central–ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியிட்டார். பிரபல எழுத்தாளரும் முன்னாள் மூத்த ஐக்கிய நாடுகள் சபை தூதருமான திரு. R. கண்ணன் புத்தகத்தை வெளியிட்டார். நிகழ்ச்சியில் ரோட்டேரியன்கள், குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் நல விரும்பிகள் கலந்து கொண்டு இளம் எழுத்தாளர் வாழ்த்தினர். வாசிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்ட கஹன்ஷ்வா, நூலகங்களில் பல்வேறு புத்தகங்களை வாசித்து, தனது கற்பனை மற்றும் கதை சொல்லும் ஆர்வத்தின் மூலம் சொந்த கதைகளை உருவாக்கத் தொடங்கினார். ‘K–Komix Kahanshwa’s Komix’ புத்தகத்தில் இளம் வாசகர்களுக்காக உருவாக்கப்பட்ட ஐந்து கற்பனை மற்றும் சாகசக் கதைகள் இடம்பெற்றுள்ளன. மேலும், பல்வேறு AI கருவிகளைப் பயன்படுத்தி கதாபாத்திரங்கள் மற்றும் கதைகளுக்கான விளக்கப்படங்களை உருவாக்கி, தனது கற்பனை உலகிற்கு உயிரூட்டியுள்ளார். இப்புத்தகம் கண்ணதாசன் பதிப்பகம் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.



கஹன்ஷ்வா, Rotary Club of Chen–nai Infocity–யின் Annette உறுப்பினராக உள்ளார். புத்தக வெளியீட்டு நிகழ்ச்சியில் கிளப் தலைவர் திரு. Shankar Natarajan உள்ளிட்ட ரோட்டேரியன்கள் கலந்து கொண்டு அவர் ஊக்கப்படுத்தினர். “K–Komix என்பது வாசிப்பு, கதை சொல்லல் மற்றும் கற்பனை மீதான எனது அன்பின் வெளிப்பாடு. வாசகர்கள் எனது சாகசக் கதைகளை ரசிப்பார்கள் என்று நம்புகிறேன்,” என இளம் எழுத்தாளர் S. கஹன்ஷ்வா தெரிவித்தார்.

## வேளாண் மேம்பாட்டு பணிகளுக்கு ரூ.5 லட்சம் வரை கடன்!

சென்னை, செப். 05–

தமிழகத்தில், கூட்டுறவு துறையின் கீழ் செயல்படும் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் விவசாயிகளுக்கு, 7 சதவீத வட்டியில் பயிர் கடன் வழங்கப்படுகிறது. இந்த கடனை, குறித்த காலத்தில் செலுத்தியதும் வட்டி முழுதுமாக தள்ளுபடி செய்யப்படுகிறது.



தற்போது, விவசாயிகள் தங்கள் நிலத்தில் மோட்டார் பம்ப் அமைத்தல், குறைந்த திறனில் மேற்கூரை சூரியசக்தி மின் நிலையம் அமைத்தல், நிலத்தை மேம்படுத்துவது, அறுவடை கருவிகள் வாங்குவது உள்ளிட்ட, வேளாண் சார்ந்த மேம்பாட்டு பணிகளுக்காக, 5 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த கடனுக்கு, 9 சதவீதம் வட்டி.

புதிய திட்டத்தின் மூலம் இந்தாண்டில், 5,000 கோடி ரூபாய் அளவுக்கு கடன் வழங்க, கூட்டுறவு துறை முடிவு உள்ளது. செய்து இதுகுறித்து, கூட்டுறவு துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது;

வேளாண் சார்ந்த மேம்பாட்டு பணிகள், அறுவடை கருவிகள் வாங்க, விவசாயிகள் தனியாரிடம் அதிக வட்டிக்கு கடன் வாங்குவதாகவும், அந்த கடனை அடைக்க சிரமப்படுவதாகவும் தகவல் கிடைத்தது.

எனவே, அந்த பணிகளை மேற்கொள்வதற்கு ஒருவருக்கு, தலா, 5 லட்சம் ரூபாய் வரை, 9 சதவீத வட்டியில் கடன் வழங்கப்பட உள்ளது. விவசாயிகள் தங்கள் அருகில் உள்ள மாவட்ட கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு சங்கங்களுக்கு சென்று, கடன் பெறலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020